**MCOP NO. 118 /2015**

**Date 28.03.2026**

**Pw 1. அபிராமி**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனது கணவர் ஓட்டி சென்ற வாகனம் அவர் பெயரில் உள்ள அவருக்கு சொந்தமான வாகனம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கான பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை காப்பீடு செய்துள்ள நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா என்றால் இருந்தது. காப்பீட்டு பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில் முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்தும்போது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டிருந்தது, ஆனால் எனது கணவர் ஓரமாக தான் வந்தார். மேற்படி விபத்தைக் குறித்து குற்ற இறுதி அறிக்கையை எனது இழப்பீடு வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் மனுதாரர் எனது மாமியார் ஆவார். எனது மாமியார் திருவில்லிப்புத்தூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த இழப்பீடு வழக்கை வாபஸ் பெற்று விட்டார். எனது கணவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பஞ்சு மில்லில் வேலை செய்து வந்தார். எனது கணவரின் ஆதார் அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் அவருக்கு ஆதார் அட்டை இல்லை. எனது கணவரின் வயது மற்றும் வருமானத்தைக் காட்டக்கூடிய எந்தவொரு ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் தான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது எனது கணவர் முன்னாடி சென்ற வாகனத்தை முந்துவதற்காக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வலதுபுறமாக ஏறி சென்று கவனக்குறைவாக சென்றதால் தான் ஏற்பட்டது என்பதால் இந்த 2ம் எதிர் மனுதாரர் எந்த இழப்பீடும் வழங்க வேண்டுவதில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்றால் சரிதான். தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றாலும், அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. மேற்படி விபத்து எனது கணவர் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அவர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரர் எனக்கு எந்தவித இழப்பீடும் வழங்க அவசியம் இல்லை என்பதால், 2ம் மனுதாரர் பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.